IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Sworn Statement | : | LW9 as PW8 | Caste | : | |
| Name | : | ஜீவரத்தினம் | Age | : | 56 |
| W/o | : | சுடலைமணி | Occupation | : | காவல் ஆய்வாளர் திருப்பாலைக்குடி |
| Village | : | கே.கைலாசபுரம் | | | |
| Taluk | : | ஒட்டப்பிடாரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 16th day of June 2026.

**16.06.2026**

முதல் விசாரணை

**1, 2 எதிரிகள் ஆஜர். 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 3 முதல் 5 எதிரிகள் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்குஅளிக்ககப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை உட்கோட்டம் திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25..05.2018ம் தேதி 18.10 மணிக்கு நான் கேணிக்கரை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த இராமநாதபுரம் கம்பர் தெருவைச்சேர்ந்த முத்துஇருளாண்டி மகன் திராவிட செல்வம் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பின்பு நிலையம் வந்து புகார் வாக்கு மூல தன்மைக்கு ஏற்ப கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண்.126/2018 பிரிவு 147, 294(பி), 324, 506(2) இதசவாக வழக்குப்பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 19.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அறிவுநிதி மற்றும் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 சாட்சிகளை விசாரித்து தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்தேன். 1 முதல் 5 எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. 30.06.2018 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த திராவிடசெல்வன் என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் டாக்டர் மனோஜ்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய காயச்சான்று பெற்றேன். இத்துடன் இவ்வழகின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 324, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது புலன் விசாரணையின் போது 6ம் எதிரி தலைமறைவாக இருந்ததால் அவரை தலைமறைவு குற்றவாளி என குறிப்பிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கின் 2ம் எதிரியின் அக்கா திருமதி.மாரி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3க்கு எதிராக குற்ற எண்.125/2018 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கும் இந்த வழக்கும் ஒன்றுக்கொன்று எதிரெதிர் வழக்கு (Case in Counter) என்றால் சரிதான். அது போன்ற வழக்குகளை முறையாக விசாரணை செய்வதற்கு தனியாக நடைமுறை உள்ளது என்றால் சரிதான். அந்த நடைமுறை எதுவும் இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு சொந்தமான வீட்டை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி அதன் பின்னர் கிரைய ஆவணம் மூலமாக 2ம் எதிரி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன் பின் சுமார் 1மாதம் கழித்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது 2ம் எதிரிக்கு சொந்தமான வீட்டில் வைத்து நடைபெற்றது என்றால் வீட்டிற்கு அருகில் நடைபெற்றது. அசா.1 விற்பனை செய்த மேற்படி வீடு சுற்றுச்சுவர் கொண்ட வீடு என்றால் கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்தது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5ன் வீடுகள் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அண்மை சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 காயம்பட்ட சாட்சி இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவ இடத்தில் ரத்தம் படிந்திருந்ததாகவோ அதனை கைப்பற்றியதாகவோ ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் குழவிக்கல் அல்லது செங்கல் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி குழவிக்கல் அல்லது செங்கல் மாதிரி வரைப்படத்தில் குறிப்பிட்டுக்காட்டப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் வாக்குமூலத்தில் சொத்தை விற்றுவிட்டு மீண்டும் வந்து பிரச்சனை செய்கீறீர்கள் என்று அசா.1னை பார்த்து எதிகள் சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அசா.1 எனது விசாரணையில் எதிரிகள் அசா.1யை பார்த்து தேவடியா பயலே என்று திட்டியதாக சொன்னாரா என்றால் எதிரிகள் திட்டியதாக மட்டும் சொன்னார். எதிரிகள் செங்கலால் அசா.1ன் மீது எரிந்ததாக அ.சா.1 எனது விசாரணையில் சொன்னாரா என்றால் உடைந்த குழவிக்கல்லால் எரிந்ததாகவும் கீழே கிடந்த கல்லால் எரிந்ததாக சொன்னார்.

3. பட்டியல் சாட்சி 2 எனது விசாரணையின் போது எதிரிகள் தேவடியா மகனே என்று திட்டியதாக சொன்னாரா என்றால் ஆம் சொல்லியுள்ளார். எதிரிகள் கற்களை எடுத்து எரியும்போது வீட்டின் முன்பு நிற்காதே என்று சொன்னதாக பட்டியல் சாட்சி 2 எனது விசாரணையில் சொன்னாரா என்றால் எங்கள் முன் வரக்கூடாது என்று எதிரிகள் சொன்னதாக என்னிடம் சொன்னார். வழக்கு சம்பவத்தின் போது 1ம் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், அ.சா.1னிடம் சண்டை செய்து அருகில் கிடந்த குழவிக்கல்லை எடுத்து அசா.1ன் உச்சந்தலையில் எரிந்து காயம்படுத்தியதாக பட்டியல் சாட்சி 3 எனது விசாரணையில் சொன்னாரா என்றால் இரு சக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லவில்லை மற்ற சங்கதிகளை சொல்லியுள்ளார்.

4. காவல்நிலையத்தில் இருந்து சுமார் 5 நிமிடத்தில் நீதிமன்றத்திற்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கடந்த 30.05.2018ம் தேதியன்று தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதற்கு காரணம் எதுவும் ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குற்ற எண். 125/2018ல் வழக்கு பதிவு செய்யப்பட்டதால் அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் அளிக்கப்பட்டு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 தான் அத்துமீறிய நபர்கள் என்றும் அவர்கள் தான் 2ம் எதிரியின் அக்கா மற்றும் லட்சுமி என்பவர்களை தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் அதற்காக பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 125/2018 வழக்குதான் உண்மையான வழக்கு என்றும் அந்த வழக்கை சரிசெய்வதற்காக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக தவறாக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு ஆவணங்களை தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில்,இடத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று பார்க்கவில்லை என்றும், சொன்ன நேரத்தில், இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தாயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.06.16 01:00:26 +0500